*"தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது". (தானியேல் 6:28)*

தென்னிந்திய திருச்சபை, திருநெல்வேலி திருமண்டலம்

# புனே சேகரம்

நவம்பர் - 2020

செய்தி மலர் -1

# பெதஸ்தா C.S.I. ஆலயம்



**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,**

உங்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள் கடந்த 10 மாதங்களாக கர்த்தர் நம்மை கரம் பிடித்து வழிநடத்தி இந்த 11வது மாதத்தையும் காணச் செய்த கிருபைகளுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

**"தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது". (தானியேல் 6:28)**

இந்த மாதத்தில் நம்முடைய காரியங்கள் எல்லாம் ஜெயமாய் இருக்கும் என கர்த்தர் வாக்கு பண்ணுகிறார். தானியேலின் காரியம் எவ்வாறு ஜெயமாய் இருந்ததோ அவ்வாறே நம்முடைய காரியமும் ஜெயமாய் இருக்கும். நம்முடைய தொழில்கள், வியாபாரங்கள், குழந்தைகளின் படிப்புகள், வேலை வாய்ப்புகள் மற்றும் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் கர்த்தர் நமக்கு ஜெயமுள்ள வாழ்வை தருவேன் என்று வாக்கு பண்ணுகிறார். அந்த வாழ்வை பெற்றுக்கொள்ள நாம் செய்ய வேண்டிய செயல்களை சிந்திப்போம்.

## 1. தீர்மானமுள்ள வாழ்வு (Decision in life) (தானியேல் 1:8)

கி.மு. 605ல் யோயாக்கீம் யூதாவின் இராஜாவாய் இருந்த நாட்களில் நேபுகாத் நேச்சார் எருசலேமைப் பிடித்த சமயத்தில் இராஜகுலத்தில் சில திறமையுள்ள அழகிலும், ஞானத்திலும் சிறந்த வாலிபர்களை பாபிலோனுக்குக் கொண்டு வந்தார்கள். யூதகுலத்தை சேர்ந்த யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மிஷாவேல், அசரியா என்பவர்களும் வந்தார்கள். அப்பொழுது தானியேலுக்கு வயது 18. அவன் பெயர் பெல்தெஷாத்சார் என மாற்றப்பட்டது.

தானியேலும் அவன் நண்பர்களாகிய அனனியா, மிஷாவேல், அசரியா என்பவர்களும், கல்தேய கல்வியில் பயிற்சி பெற்று இராஜ அரண்மனையில் சேவை செய்யத் தகுதியுள்ளவர் ஆனார்கள். ஆனால் விக்கிரக ஆராதனைக்கேற்ற இராஜாவின் போஜனமும், திராட்சரசமும் (மதுபானம்) அவர்களுக்கு நியமிக்கப்பட்ட படியால் அவைகளால் தங்களை தீட்டுபடுத்தாமல் தங்களுக்கு பருப்பு முதலிய மரக்கறிகளும், தண்ணீரும் கொடுக்கும்படி, வேண்டிக் கொண்டார்கள். (தானியேல் 1:8-16)

அன்பானவர்களே! தானியேல் இங்கு நல்லதொரு தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறான். என் வாழ்விலே எதினாலும் தன்னை

தீட்டுப்படுத்தாதபடி தீர்மானம் செய்து தன் வாழ்விலே வாழ்ந்தும் காட்டுகிறான். இந்த தீர்மானம் தான் தானியேலின் வாழ்வு ஜெயமுள்ள வாழ்வாக அமைய ஏதுவாக இருந்தது. அதே போன்று நல்ல ஜெபிக்கிற நண்பர்களும் அவனோடு இருந்தார்கள். நாமும் நம்முடைய வாழ்விலே ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியம் இருக்குமானால் அதில் இருந்து விடுபட தானியேலைப் போல நல்ல தீர்மானங்களை எடுக்க வேண்டும். நாமும் இந்த உலகத்தின் பாவங்களால் கறைபடாதபடிக்கு, பாவ பழக்கவழக்கங்களினால் (புகை, போதை, மது, சினிமா, கேளிக்கை, கெட்ட நண்பர்கள்) நம்மை தீட்டுப்படுத்தாதபடி நாம் தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ தீர்மானிக்கும்போது நம்முடைய காரியங்கள் எல்லாம் ஜெயமாயிருக்கும். (மாற்கு 7 : 20,23) வசனங்களில் மனுஷருக்குள்ளே இருந்து புறப்படுகிற ........... பொல்லாங்கானவைகளாகிய இவைகளே தீட்டுப்படுத்தும். **யாக்கோபு 1:27**ல் உலகத்தால் கறைபடியாதபடி காத்துக் கொள்வதே "பக்தி" என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே நாமும் தீட்டுப்படுத்தாதபடி நம்மைக் காத்துக் கொள்ள உறுதியான தீர்மானம் எடுத்து அதில் நிலைத்திருக்கும் போது ஜெயமான வாழ்வு வாழ முடியும்.

## 2. உண்மையுள்ள வாழ்வு (Truth in Life ) (தானியேல் 6:4)

எபிரேய மொழியில் **"ஆமென்"** என்ற சொல்லுக்கு **"நிச்சயப்படுத்து", "திடமாக்கு", "நம்பு"** என்ற பொருள்கள் உள்ளன. "ஆமென்" என்ற சொல் **உண்மையான, "நம்பத்தக்க"** எனப் பொருள்படும். ஆண்டவரும் பல முறை **"மெய்யாகவே, மெய்யாகவே"** என்று தமது உண்மையை வற்புறுத்திக் கூறிய பொழுது, "ஆமென்" என்ற சொல்லையே பயன்படுத்தினர். **"உண்மை"** என்பது வாய்மொழியில் (வாய்மை) காணப்படுவது மாத்திரமல்ல செயல்பாட்டிலும் உண்மை. கடவுள் உண்மையில் உயர்ந்தவர். (சங் 31:5) ஆண்டவர் மெய்யான கடவுள் (எரே 10:10) தம்மில் உண்மையான பற்றுவைக்கிறவர்களை அவர்களுடைய நிலையற்ற மாறுபாடுள்ள நிலையிலிருந்து கடவுள் மீட்கிறார்.

தானியேல் தேவன் மீது உண்மையான பற்று வைத்து இருந்தார். தேவன் தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார் (தானி 1:17) இவன் மீது பொறாமை கொண்ட பலர் தந்திரமாக தரியு மன்னனின் துணை

கொண்டு சட்டம் ஒன்றை பிறப்பித்தனர். இவனை குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள். ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் உண்மையுள்ளவனாய் இருந்தபடியால் அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும், குறைவும் காணப்படவில்லை. ராஜாவாகிய தரியு கட்டளைப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டது என்று அறிந்தும் தன் வீட்டுக்குள்ளே போய் தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும், தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான்.

அன்பானவர்களே! தானியேல் இங்கு ஜெபம் பண்ணுவதில் உண்மையுள்ள மனிதனாக காணப்படுகிறான். எருசலேமுக்கு நேராக தன் தேவனுக்கு முன்பாக மூன்று வேளையும் ஜெபம் பண்ணுவேன் என்று தீர்மானம் செய்து இருந்தான். ஜெபம் பண்ண வேண்டும் என்று எடுத்துக் கொண்ட தீர்மானத்தில் உண்மையாக காணப்பட்டான். உண்மையாக இருந்து செயல்பட்டதினால் கர்த்தர் தானியேலின் வாழ்வு ஜெயமுள்ள வாழ்வாக மாற்றி ஆசீர்வதித்தார். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதத்தை பெறுவான் (நீதி 28:20) என்ற வேத வாக்கின்படி நம்முடைய வாழ்வில் குடும்பம், படிப்பு, தொழில், வியாபாரம், பணியில், பேச்சில் உண்மையுள்ளவர்களாய் இருந்தால் நாமும் ஜெயமுள்ள வாழ்வை சுதந்தரித்துக் கொள்வோம்.

### 3. விசுவாசமுள்ள வாழ்வு (Faith in life) (தானி 6:23)

ஆவிக்குரிய வாழ்விலே சிலர் மரித்து போன நிலையில் காணப்படுகின்றனர். விசுவாசம் என்றால் என்ன? என்று கேட்க கூடியவர்களும் உண்டு, நாம் கண்டிராத ஒன்றை நடக்கும் என்று உறுதிபட நம்புவதே விசுவாசம். தானியேலின் வாழ்விலே கர்த்தர் என்னை காப்பாற்றுவார் என்ற விசுவாசம், கடவுளுக்காய் வைராக்கியமாய் செயல்பட்ட விதம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. ராஜாவின் உத்தரவுபடி ராஜாவை மட்டும் வணங்க வேண்டும் என்ற கட்டளை பெற்ற பின்பும் தானியேல் தன் தேவனிடத்தில் ஜெபம் பண்ணினான். ஆகவே, சிங்க கெபியில் தூக்கி வீசப்பட்டான். ஆனாலும் தானியேல் மீது ஒரு சேதமும் காணப்படவில்லை. காரணம் அவன் தன் தேவன் பேரில் விசுவாசித்து இருந்தான் (தானியேல் 6:23).

அன்பானவர்களே! நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இங்கு நாம் அறிய வேண்டிய காரியம் என்னவென்றால், யாரெல்லாம் தானியேல் மீது குற்றம் சாட்டினார்களோ அவர்கள் எல்லோரையும் வரவழைத்து சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். அவர்கள் கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து, அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கி போட்டது. தானியேலின் உயிருக்கு ஒரு சேதமும் வரவில்லை. மேலும் தரியு ராஜா தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கி பயப்பட வேண்டும். மேலும் அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்து இருக்கிறவர், அவருடைய ராஜ்ஜியம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தம் நிலைத்து நிற்கும் என்று சொல்லி தேவனுடைய நாமம் தானியேலின் விசுவாசத்தின் மூலம் மகிமைப்பட்டது. தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாய் இருந்தது.

நாமும் உலகத்தை மேற்கொண்டு கெர்ச்சிக்கிற சிங்கமாகிய சாத்தானை வீழ்த்தி ஜெய வாழ்வு வாழ நமது விசுவாசம் உயிருள்ள விசுவாசமாய் இருக்க வேண்டும். விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம். நம்முடைய வாழ்க்கையில் தானியேலைப் போல நல்ல தீர்மானங்களை எடுத்து ஜெபித்து நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டு தாழ்மையுடன் தேவ வழி நடத்துதலுக்கு அர்ப்பணித்து விசுவாசத்துடன் செயல்படும் போது ஜெயமுள்ள வாழ்வை ஆண்டவர் தந்து நம்மை ஆசீர்வதிப்பார் ..... ஆமென்.

**ஜெபம்:-**

அன்பின் பரலோக பிதாவே நாங்களும் தானியேலைப் போல தீர்மானத்தில் உறுதியாயும், உண்மையாயும் விசுவாசத்தோடும் வாழ எங்களுக்கு உதவி செய்யும்...ஆமென்.

-----

**Beloved in Christ,**

Greetings to you all in the name of Resurected lord Jesus Christ. Let us thank our lord who is being with us last 10 months. By his grace we are entering into the 11th month.

"**Daniel prospered and enjoyed success" (Daniel 6:28)**

Our lord promises that our life will prosper and be a success in this 11th month. We will succeed in all things like Daniel. Whatever be in the situation we are now , in business, family life, children education, professional life , our God will make it prosper and success. Let us meditate the following things in order to get blessed life.

## 1. Decision in life (Daniel 1:8-16)

Beloved, if you read the above mentioned verses you can understand Daniel 's decision. He took a decision not to defile himself with king's food or wine. This decision made Daniel to live a successful life. He also had good praying friends. We too, are expected to take right decisions in our life and overcome the shortfalls if any which are not pleasing to our God. We should be careful that not to defile ourselves with evil thoughts, sexual immorality, wickedness, pride, cinema, drugs and other entertainments.

When we are careful about this and take right decisions in the presence of God, He will make our life successful like Daniel. (Mark 7:20-23). He went on: "What comes out of a person is what defiles them. For it is from within, out of a person's heart, that evil thoughts come sexual immorality, theft, murder, adultery, greed, malice, deceit, lewdness, envy, slander, arrogance and folly. All these evils come from inside and defile a person."

James 1:27 says to keep ourselves unstained from the world. So when we take right decisions not to defile ourselves and unstained from the world, we will also get a successful and blessed life.

## 2. Truth in Life (Daniel 6:4)

In the Hebrew language, The term "amen" means the 'real ',' 'When the Lord repeatedly demanded his truth, "yes, indeed," he used the word "amen". The truth is that what is seen in the mouth is not only true but also in action. God is indeed superior (psalm 31:5).The Lord is the true god (Jer 10:10)God redeems those who make real interest in themselves from their unstable disguise. Daniel had knowledge of all visions and dreams (Daniel .1:17).Many people who are jealous of him made a law with the king's help. They found him guilty…..

There was no fault found in him, because he was faithful. And he went into his house, and went in his chamber toward Jerusalem, and offered three times a day, and prayed, and thanked his god, to be open in his own chamber. Beloved ones! Daniel is found here in prayer, a faithful man. For he made a decree, saying, I will pray three times before my god towards Jerusalem. He was genuinely in the decision to make a prayer. And the Lord, being faithful, turned Daniel's life into a mighty life. A faithful man shall receive perfect blessing (pro28:20).If we are loyal in our lives, we will overcome all our life.

## 3.Faith inLife - (Daniel6 : 23)

Some of the spiritual is being some times people used to ask loyalty "What is Faith"? Faith is to "unseen which will be happened "..Faith in Lord is, He will protect me like in Daniel's life. The way god has been zealous for us makes us thrill. Then Daniel prayed to his god, after heard that only the king to be worshiped. So, he was thrown into the lion’s den. But nothing harm unto Daniel. Because of his faith in God (Daniel 6:23).

Beloved, Faith bring s the victory over the world. And this is what we have to know: and whoever is guilty of Daniel, were thrown into lion’s den. Before they had joined the cave, the lions moved over them. Their bones were all shattered. There was no harm to Daniel's life. Also the king of darius must fear before the god of Daniel.

And he is the living god, and he is everlasting, and his kingdom is immortal; And his Lord's name shall continue until the end, and his name is glorified through the faith of Daniel. But in the kingdom of darius, and in the reign of Cyrus, Daniel's matter was a victory…..

It is impossible for god to be pleased without faith. In our life, like Daniel, we pray for good decisions and prepare us and humbly pray for the way of god to act with faith and bless the great life. Amen.

**Prayer:** Lord, guide me through your wisdom as I make good decisions in my life…… Amen.

**---**

## 01.11.2020

### பரிசுத்தமாய் வாழ வேண்டும்

யோசுவா ஜனங்களை நோக்கி உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள: நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான். (யோசுவா 3:5)

### Holiness for God

Then Joshua said to the people, Sanctly yourselves; for tomorrow the LORD will do wonders among you. (Joshuva 3:5)

## 08.11.2020

### நீதியும் சமாதானமும் - உன்னிடம் உண்டா?

மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ்செய்து இரக்கத்தைச் சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். (மீகா 6:8)

### Justice and Pease

He has told you O mortal, what is good, and what does the LORD require of you but to do justice, and to love kindness, and to walk humbly with your God? (Micah 6:8)

## 15.11.2020

### பெண் குழந்தைகளின் நலன் காக்க உறுதிகொள்

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக ஸ்திரியே உன் விசுவாசம் பெரிது. நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகன் ஆரோக்கியமானான். (மத்தேயு 10:28)

### Assuring Future of the Girl Child

Then Jesus answered her, Woman, great is your faith. Let a be done for you as you wish. And her daughter was healed instantly. (Mathew 15:28)

## 22.11.2020

### இறையாட்சி கொண்டுவர துணிவு

தன் சிலுவையை எடுத்துக்கொர்ணடு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. (மத்தேயு 10:36)

### Taking Risk for the Reign of God

And whoever does not take up the cross and follow me is not worthy of me. (Mathew 10:38)

## 29.11.2020

### கிறிஸ்துவின் வருகை உனக்கு மகிழ்ச்சிதானா?

காலம் நிறைவேறினபோது, ஸ்திரியினடத்திற்கு பிறந்த வரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினான். (கலாத்தியர் 4:5)

### Joyful Expectation of Christ’s Coming

In order to redeem those who were under the law so that we might receive adoption as children. (Galatians 4:5)

### இந்த மாதம் பிறந்த நாள்

1. 03/11/2020 Baby. Susanna Joel
2. 03/11/2020 Mr. Kabilan G
3. 11/11/2020 Mr. A.E. Stephen
4. 12/11/2020 Mrs. Merryl Stephen
5. 16/11/2020 Mrs. Jennifer

6. 16/11/2020 Mas. Marcus Jones
7. 21/11/2020 Mr. Jeya Kumar A
8. 21/11/2020 Rev.S.Soundarapandian
9. 23/11/2020 Mr. Kepson Marm A
10. 25/11/2020 Master. Samuel Jaison A
11. 27/11/2020 Mr.Kepson Marm A
12. 28/11/2020 Master. Samuel Jaison A

**இந்த மாதம் திருமண நாள்**

1. 13/11/2020 Mr. & Mrs. Jeya Kumar A
2. 28/11/2020 Mr. & Mrs. S. Samson

**பிறந்தநாள் மற்றும் திருமண நாள் கொண்டாடுபவர்களுக்கான வாக்குதத்தம்**

***கர்த்தர்*** *நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.*

***ஏசாயா:58:11***

And the LORD shall guide thee continually, and satisfy thy soul in drought, and make fat thy bones: and thou shalt be like a watered garden, and like a spring of water, whose waters fail not.

Isaiah:58:11

**உங்களுக்காக ஜெபிக்கும்**

**Rev. S. சௌந்திரபாண்டியன்**

**சேகர குரு,**

**புனே சேகரம்**

